★ ★

Registered as a Newspaper in Ceylon  விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7  EELA NADU  இதழ் 75

National Tamil Daily  தேசிய தினசரி

(27 4-65)

விசுவாவசு சித்திரை 15 துல்ஹஜ் பிறை 24 செவ்வாய்க்கிழமை

### இந்திய-பாக். எல்லையில் நிலைமை மோசம்

## இந்திய முப்படைகளுக்கு உஷார் உத்தரவு

புதுடில்லி, ஏப். 26

இந்திய-பாகிஸ்தான் எல்லைகளில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதைத் தொடர்ந்து இந்தியாவின் முப்படைகளுக்கும் இன்று உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தச்செய்தி அச்சுக்குப் போகும்வரை நெருக்கடி நிலவும் கட்ச்பகுதியில் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய-பாகிஸ்தான் எல்லைகளில் இன்றுகாலை முதல் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பமாகின. நேற்று இப்பகுதிகளில் பதட்ட நிலைமை குறைந்திருந்தது. ஆனால் பாகிஸ்தான் துருப்புகள் விட்டுவிட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்தனர்.

இன்று பிரதமர் திரு. சாஸ்திரியுடன் பாதுகாப்பு மந்திரி திரு. சவான் மேலும் ஆலோசனைகள் நடத்தினார். இதனைத் தொடர்ந்து சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்ச் பகுதியில் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்றும் இந்தியாவின் எல்லைக்குள்ளிருக்கும் நிலைகள் மீது பாகிஸ்தான் துருப்புகள் கடும் தாக்குதல் நடத்தி வருவதாகவும் இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடற்படை, இராணுவம், விமானப்படை ஆகியவற்றுக்கு உஷார் உத்தரவுகள் வழங்கப்பட்டதாகவும் சகல படைகளும் தயார் நிலையில் இருப்பதாகவும் இந்திய லோகசபையில் பாதுகாப்பு மந்திரி திரு. சவான் அறிவித்தார்.

காஷ்மீரில் பாகிஸ்தான் துருப்புகள் பேர் [illegible] கோட்டை மீது தாக்குதல்கள் நடத்தி வருவதாக லோகசபையில் அறிவிக்கப்பட்டது. எல்லைப் பகுதிகளில் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது

# சத்தியாக்கிரக வழக்கு வாபஸ்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நான்கு எம். பி.க்கள் மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை பொலிஸார் நேற்று வாபஸ் பெற்றனர்.**

இவ்வழக்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிசார் தாம் வழக்கை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தனர்.

1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ந் திகதி யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்னால் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தாவையும் பொலிஸ் சுபரின்டென்ட் திரு. ஆர்ன்டையும் அவர்களது உத்தியோகக்கடமையைச் செய்யவிடாது தடைசெய்ததாகவும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் (காலஞ்சென்ற) திரு. வி. ஏ. கந்தையா, புரக்டர் திரு. எஸ். நடராசா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணப் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் முதலில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு அட்டோர்னி ஜெனரலின் உத்தரவின்படி கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருந்தது. பிரதிவாதிகள் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு வழக்கை மாற்றும்படி அப்பீல் செய்தனர். அப்பீல் தீர்ப்பைத்தொடர்ந்து வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு வாபஸ்பெறப்பட்டது.

1961-ம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் எதிரொலிதான் இவ்வழக்கு.

### சிரமதான இயக்கம்

பருத்தித்துறை திங்கள்

புலோலி கிழக்கில் ஆரம்பமான பாதை செப்பனிடும் சிரமதானப்பணியின் ஐந்தாம் நாள் வேலையை காலை வடமராட்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு யே. டி. ஆர்னல்ட் தொடக்கிவைத்தார்.

பல கிராமசேவகர்கள் பிரிவில் இருந்து அவர்கள் தலைமையில் வந்த சுமார் 60 தொண்டர்கள் காரியாதிகாரி காரியாலயத்தில் இருந்து அணியாக வேலைத்தலத்தை அடைந்தனர். வேலவேண்டுவோர் கழக உறுப்பினர்களுடன் அன்றைய பணியில் சுமார் 100 பேர் கலந்துகொண்டனர்.

இச் சிரமதானப்பணி சுமார் இரண்டுவார காலமளவிற்கு நீடிக்கலாம் எனவும் இப்பணியில் அரசாங்க அலுவலகங்களைச் சேர்ந்த ஊழியர்களும் வெளியூர்ப் பிரமுகர்களும் விரைவில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள் எனவும் கூறப்படுகிறது.

## பட்டதாரிகள் நியமனத்தில் உடனடி நடவடிக்கை எடுக்குக

### கல்விமந்திரிக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்க மகஜர்

யாழ்ப்பாணம், செவ்

தமிழ் பட்டதாரிகளை உதவி ஆசிரியர்களாக நியமிக்கவென தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் கல்விஇலாகாவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தபோதும் இந்நியமனங்கள்பற்றி கல்விஇலாகா இதுவரையும் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், இதுவிஷயமாக அக்கறையுடன் கவனம் செலுத்தி உடனடியாக நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேலையற்ற இலங்கை (தமிழ்) பட்டதாரிகள் சங்கம் கல்வி மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளது.

பாடசாலைகள் இரண்டாம் தவணைக்கு திறக்கப்படும் பொழுது இப்புதிய நியமனங்கள் வழங்கப்படும் என முன்னர் கூறப்பட்டபோதிலும் இற்றைவரை அதற்கேற்ற வகையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் மகஜரில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்தும் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்தும் வெளியேறிய தமிழ் கலைப்பகுதிப்பட்டதாரிகள் 600 பேர் வேலையற்றிருப்பதாகவும் இவர்களின் கஷ்டங்களை எடுத்துரைக்க தமக்கு சந்தர்ப்பம் அளிக்கும்படியும் சங்கத்தினர் மகஜரில் கோரியுள்ளனர்.

### குழப்பநிலை

லண்டன், ஏப்ரல் 26

டொமினிக்கன் குடியரசில் கிளர்ச்சிக்காரர்கள் ஆட்சியை கைப்பற்றியிருந்தபோதிலும் அங்கு நிலைமை குழப்பமாகமாகவிருப்பதாக லண்டன் செய்திகள் கூறுகின்றன.

---

## வேலையில்லாமையைத் தீர்க்க அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு

### தொழில் மந்திரிக்கு தனியார் துறை ஸ்தாபனங்கள் வாக்குறுதி

கொழும்பு, திங்கள்

வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் தொழில் மந்திரியுடன் ஒத்துழைப்பதாக பிரதான தொழில் ஸ்தாபனங்கள் வாக்குறுதியளித்திருக்கின்றன. இவ்விஷயத்தில் தனியார் துறையின் துரித ஆதரவை மந்திரி கோரி, அரசாங்கத் துறையுடன் அவர்கள் ஒத்துழைப்பது அத்தியாவசியம் எனக் கேட்டுக்கொண்டார்.

14 வயது முதல் 24 வயது வரையுள்ள படித்த வாலிபர்களுக்கு தொழிலில் பயிற்சி அளிக்கவேண்டும் என்றும் மந்திரி கோரியிருந்தார்.

தனியார் துறைகளில் வேலை வாய்ப்பை எப்படியான முறையில் அதிகரிக்கலாமென்பதைக் கண்டறியும் பொருட்டு மந்திரி மொகமத் இன்று தனியார் துறை ஸ்தாபனங்களின் நிர்வாகிகளுடன் பேச்சுக்கள் நடத்தினர். நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்குத் தீர்வொன்றைக் கண்டுபிடிப்பதில் மந்திரிகளடங்கிய கமிட்டியொன்றும் ஈடுபட்டு வருகின்றது.

---

### திருச்சியில் ரூ. 20 கோடி தொழிற்சாலை

சென்னை, ஏப் 26

திருச்சியில் 20 கோடி ரூபா செலவிலான யுத்த தளபாட உற்பத்தித் தொழிற்சாலை அடுத்தவருடம் உற்பத்தியை ஆரம்பிக்குமென மத்திய மந்திரி [illegible] ஏ. எம். தோமஸ் கூறினர்.

### தலைமைக்காரியாலய நேரடி மேற்பார்வை

யாழ்ப்பாணம், செவ்

கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகளில் புதிய மாணவர்களை சேர்க்கும் பொழுது இனிமேல் தொழில் நுட்ப கல்வி இலாகா தலைமை காரியாலயத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுவதாக தொழில் நுட்ப கல்வி பயிற்சித்திணைக்கள இயக்குனர் அகில இலங்கை வர்த்தக சங்கமன்ற காரியதரிசிக்கு அனுப்பி வைத்துள்ள பதில் ஒன்றில் தெரிவித்துள்ளார். 1965-66-ம் கழகவாண்டுக்கு மாணவர்களை சேர்க்கும் பொழுது புகுமுக பரீட்சையில் பரீட்சார்த்திபெறும் புள்ளிகளின் அடிப்படையில் தலைமை காரியாலயத்தினால் அங்கீகரிக்கப்பட்டே மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் [illegible] குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தான் 10 மைல் ஊடுருவி தாக்கியது?

புதுடில்லி ஏப் 26

இந்தியாவின் முப்படைகளும் உஷார் நிலைக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து முப்படையினரின் லீவுகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

விடுமுறையில் இருக்கும் முப்படையைச் சேர்ந்த சகல உத்தியோகஸ்தர்களும் உடனடியாக வேலைக்குத் திரும்பவேண்டுமென்று சம்பந்தப்பட்ட பகுதிகள் அறிவித்துள்ளன. விடுமுறை கோரிமனுச்செய்தவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இன்று பகல் கிடைத்தசெய்திகளின் படி கட்ச்பகுதியில் கடுமையான சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் பாகிஸ்தான் துருப்புக்கள் டாங்கிகளை உபயோகித்து 10 மைல் இந்திய எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதாயும், பாகிஸ்தானியருக்கு பெரும் நஷ்டம் விளைவித்து தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்றும் திரு சவான் லோகசபையில் கூறினர், நிலைமைபற்றி வருகிற புதன்கிழமை லோகசபை விவாதிக்கும்.

கஷ்மீரில் ரஸாக்கர்களுக்கும் முஜாஹிர்களுக்கும் பாகிஸ்தான் தீவிர பயிற்சியளித்து வருகிறது என்றும், துருப்புக்களை நகர்த்தியிருக்கிறது என்றும திரு. சாவன் கூறினர்.

கட்ச் பகுதியில் ஒரு தரைப்படை பிரிகேடும், ஒரு கவசவண்டிப் பிரிகேடும இன்று தாக்குதல் நடத்தியதாக அவர் கூறினர்

கஷ்மீரில் அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தான் உபயோகித்திருப்பதாயும், கைப்பற்றப்பட்ட இந்த ஆயுதங்கள் டில்லியிலுள்ள அமெரிக்க தூதரிடம் காட்டப்பட்டன என்றும் யுத்த நிறுத்த எல்லைக்கோட்டிலிருந்து அவர்கள் படிப்படியாக முன்னேறி வருகிறார்கள் என்றும், ஐ. நா. பார்வையாளர்களிடம் புகார் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதென்றும் திரு. சாவன் கூறினர்.

இதற்கிடையில் இம்மாத ஆரம்பத்தில் லடாக் பகுதியில் சீன ராணுவத்தினர் 6 மைல் ஊடுருவியதாயும், கொழும்பு யோசனைகளுமாறான இச்செயல் குறித்து சீன அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

பிரதமர் சாஸ்திரி, "நாம் ஒன்றுபட்டிருக்கிறோம். ஒன்றுகின்று போரிடுவோம் என்பதை உலகம் அறியட்டும். நிலைமையை ராணுவத்திடம் விட்டுவிடவேண்டும்" என அங்கத்தினர்கள் தெரிவித்த கவலைக்குப் பதிலளிக்கையில் கூறினர். அப்போது சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பூமியும் காற்று, மழை, சூரியனைப் போன்றது தான், அது எல்லோருக்கும் சொந்தம் ஏனென்றால், தன்னைப் படைத்த ஆண்டவனைத் தவிர வேறு யாருக்கும் சொந்தமல்லை.

— வினோபாஜி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 289.

ஈழ ... விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 15 உ (27-4-65)


## புதிய நியமனங்கள்

அரசாங்க கூட்டுஸ்தாபனங்களில் அரசாங்க எம். பிக்கள் சிலரின் உறவினர்களும் ஆளும்கட்சிகளின் சார்பில் சென்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சில அபேட்சகர்களுக்கும் உத்தியோகம் வழங்கப்பட்டுள்ளது. இது முன்னைய அரசாங்கம் செய்த தவறையே இந்த அரசாங்கமும் செய்வதாகவுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை, கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்போன்ற அரசாங்க கூட்டுஸ்தாபனங்களின் தலைவர் பதவிகளுக்கும் நிர்வாகசபை அங்கத்தவர் பதவிகளுக்கும் சமீபத்தில் புதிதாக சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களின் உறவினர்களும் சென்ற பொதுத் தேர்தலில் ஆளும்கட்சிகளின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களும் என்பது நாடறிந்த விஷயம். முன்னைய அரசாங்கங்கள் அரசாங்கத்திலும் அரசாங்க ஆதரவிலுள்ள கூட்டுஸ்தாபனங்களிலும் தங்கள் உறவினர்களையும் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த கட்சி உறுப்பினர்களையும் உயர்பதவிகளுக்கு நியமித்தார்களென்றும் அவர்கள் அப்பதவிகளைத் தங்களின் நலனுக்கும் தங்கள் கட்சியின் நலனுக்கும் உபயோகித்து தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்களென்றும் இன்றைய ஆளும்கட்சியினர் குற்றம்சாட்டி வந்தனர். இதே குற்றச்சாட்டுக்களை இன்றைய எதிர்க்கட்சியினர் ஆளும்கட்சியினர்மீது சுமத்தக்கூடிய முறையில் புதிய நியமனங்களை ஆளும்கட்சியினர் செய்துள்ளனர். இது அரசாங்கக்கூட்டுஸ்தாபனங்களும் அரசாங்கநிர்வாகமும் சீராக நடைபெற உதவ முடியாது.

அரசாங்கத்திலும் அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிலும் காலியாகும் இடங்களுக்கு நியமிக்கப்படுபவர்களும் புதிதாக நியமிக்கப்படுபவர்களும் திறமை, தகுதி ஆகியவைகளின் அடிப்படையிலேயே நியமிக்கப்பட வேண்டும். ஆளும்கட்சி எம். பி.க்களின் உறவினர்களாக இருப்பதும் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தும் தகுதியாகவும் திறமையாகவும் கணிக்கப்படும் பழக்கத்துக்கு

## "குடிசைத்தொழிலில் கவனம் செலுத்துக"

சுழிபுரம், திங்கள்

"போட்டியில்கலந்துகொள்பவர்கள் வெற்றியையும் தோல்வியையும் சமனாக ஏற்றுக்கொள்ளவேண்டும்". உடல் வளத்தை பெருக்குவதற்கு விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதுபோல் பொருளாதார வளத்தை பெருக்குவதற்கு பல போட்டிகளையும் நடத்தவேண்டும், என்று வலி மேற்கு காரியாதிகாரி திரு. டபிள்யு செல்வரத்தினம் சங்கானை இந்து முற்போக்கு வாலிபர்சங்க வருடாந்தவிளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு செல்வரத்தினம் மேலும் பேசுகையில், எமது பிள்ளைகள் சகல துறைகளிலும் முன்னேறவேண்டும். குடிசைக்கைத்தொழில் போன்றவற்றில் இளைஞர்கள் அதிகம் கவனம்செலுத்தவேண்டும். நாட்டுக்கு நல்ல பயன்படத்தக்கவகையில் போட்டிகளை உருவாக்கவேண்டும். அப்படி செய்வோம் ஆனால் நாம் அதிக நன்மையை அடையலாம் என்றும் கூறினார்.

சங்கானை பட்டினசபை தலைவர் திரு. க. அம்பலவாணர் பேசுகையில், எமது பட்டினசபை பகுதி இன்று பலவகையிலும் முன்னேறிவருகின்றது. பட்டினசபைக்கு மத்தியமாக ஒரு விளையாட்டு மைதானம் இல்லாதது பெருங்குறையாகும். இக்குறையை விரைவில் தீர்க்கவேண்டும் என்று கூறினர்.

## மகாநாடு ஒத்திவைப்பு

மீசாலை, திங்கள்

இம்மாதம் 30-ந்திகதி வவனியாவில் நடைபெற இருந்த வடமாகாண உணவுஉற்பத்தி மேற்பார்வையாளர் வருடாந்த மகாநாடு பின்போடப்பட்டுள்ளது. அகிலஇலங்கை உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களின் யூனியன்கள் மகாநாடு விரைவில் கொழும்பில் நடைபெற இருப்பதால் வடமாகாண உற்பத்தி மேற்பார்வையாளர் மகாநாடு கொழும்பில் நடைபெறலாம் என அறியப்படுகிறது.

---

தேசிய அரசாங்கம் முற்றுப்புள்ளி வைக்குமென நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் தேசிய அரசாங்கத்தின் செயல் ஏமாற்றமளிப்பதாகவுள்ளது.

நியமனங்கள் ஒருபுறமிருக்க பதவிஉயர்வு, இடமாற்றம் முதலிய விஷயங்களிலும் அரசாங்க இலாகாக்களிலும் கூட்டுஸ்தாபனங்களிலும் ஆளும்கட்சி எம். பிக்களின் தலையீடு இருந்து வருவது இலங்கையில் சர்வசாதாரணம். இடமாற்றம், பதவி உயர்வு, உத்தியோக நியமனம் எம். பி.க்களின் கடமையென பொதுமக்களும், தங்கள் கடமைகளில் ஒன்றென எம். பி.க்களும் தவறுன கருத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் அரசாங்க, அரசாங்க கூட்டுஸ்தாபனங்களின் நிர்வாகமும் சீராக நடைபெறத் தடையாகவுள்ளது.

முன்னைய அரசாங்கம் செய்த தவறை தேசிய அரசாங்கம் திருத்தி மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற வேண்டும். அரசாங்கம் இதைக் கவனத்தில் கொள்ளுமென்று எதிர்பார்க்கிறோம்.

# அகலவத்தை கொலைவழக்கு விசாரணை ஆரம்பம்

களுத்துறை, திங்கள்

அகலவத்தை கொலைவழக்கு நேற்று முன்தினம் களுத்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி டக்ளஸ் விஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் அகலவத்தை தொகுதியில் உள்ள தலைமையாசிரியர் பிபசிறி காரியவாசம் என்பவரை 1965ம் ஆண்டு மார்ச் மாதம் 20ந் தேதி அகலவத்தை தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராகச் சென்ற தேர்தலில் போட்டியிட்ட ஜி. டி. டேவிட், லயனல் குணதிலகா, கே. ஏ. சாமுவேல் ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு. ஆர். ஏ. கன்னங்கரா, திருவாளர்கள் சி. எஸ். பாரகுமாரகுலசிங்கம், ரத்னசிறி ஆகியோரின் உதவியுடனும், திருவாளர்கள் ரி. எல். பெர்னாண்டோ, டெரிக் பெர்னாண்டோ, திலகாடி ஆபிறு ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானர். முடிக்குரிய தரப்பில் திரு. ரேசல்வைட், மத்துகம ஏ.எஸ்.பி. திரு.எஸ். சுமணவீராவின் உதவியுடன் ஆஜரானர்.

இவ்வழக்கில் உள்ள எல்லாச் சாட்சியங்களும் தயாராகிவிட்டதென முடிக்குரிய வழக்கறிஞர் தெரிவித்தார்.

புத்ததாஸா குணதிலகா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

"அகலவத்தை நோக்கிச் சென்ற காரொன்றில் நானும் சென்றேன். குணவர்த்தன, குணசிங்கா ஆகியோரும் அதே காரில் வந்தார்கள். அது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான கார் என்று தெரியாது. காலஞ்சென்ற காரியவாசம் காரின் முன் ஆசனத்தில் இருந்தார். நானும் காரியவாசமும் மற்றிருவரும் அகலவத்தையில் திலக் அச்சக்கூடத்திற்கருகில் இறங்கினோம்

நீதிபதி- அச்சக்கூடம் திறந்திருந்ததா?- ஆம்.

நீதிபதி- அச்சக்கூடத்தில் வேலை நடைபெற்றதைப் பார்த்தீரா?- இல்லை.

நீதிபதி- அச்சக்கூடச் சொந்தக்காரருக்கு தொழிலாளர்களும் அச்சக்கூடம் பூட்டப்பட்டதென்று கூறினால் அது பொய்?- ஆம்.

குணத்திலகாவின் வீட்டு விறாந்தையில் இருந்த டேவிட் 'அவனைச் சுடு' என்று சத்தமிட்டார். இதைத் தொடர்ந்து ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நான் மூன்று எதிரிகளையும் பார்த்தேன். இவர்களைத் தவிர வேறு ஐம்பதுபேருமிருந்தார்கள். யார் சுட்டார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை யாரும் துப்பாக்கி வைத்திருந்ததையும் நான் காணவில்லை. அவனைச் சுடு என்று யாரைப் பார்த்து டேவிட் கூறினாரென்று எனக்குத் தெரியாது. காரியவாசம் நிலத்தில் விழுந்தார். குணசிங்காவுடன் அவரைக் களுத்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றோம்.

# வேலையில்லா திண்டாட்டத்தை தீர்க்க தீவிர முயற்சி

## தேசிய அரசாங்கம் மேற்கொள்வதாக உடுப்பிட்டி எம். பி. தகவல்

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சி வாணி கலைக்கழக மாணவர்கள் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்துக்கு வரவேற்பளித்துக் கௌரவித்தனர். இவ்வரவேற்பையொட்டி நண்பகல் விருந்து ஒன்றும் அளிக்கப்பட்டது. வாணி கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பிரமுகர்கள் உட்பட சுமார் 800 பேர் வரையில் இவ்விருந்தில் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது-

"வாணி கலைக்கழகம் தமிழுக்கும் கலைக்கும் செய்து வரும் தொண்டு மிக பெரிதாகும். இப்பகுதியில் புலவர்களையும், பண்டிதர்களையும், கலைஞர்களையும் உருவாக்கி வருவது பலரும் அறிந்த உண்மையாகும். தமிழ் வாழ, தமிழர் கலைகளும் பண்பாடும் மேம்பட வாணி கழகமும் அதன் மாணவர் மன்றமும் நீடு வாழவேண்டும்

இன்றைய தேசிய அரசாங்கம் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்கவேண்டும் என்று பேரவாக்கொண்டுள்ளது. பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவும் அவரைச் சார்ந்த சில மந்திரிகளும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதில் தீவிரமான திட்டங்களைத் தீட்டிவருகின்றனர் அவர்களுடைய திட்டங்களினால் எமது வாலிபர்களுக்கு நன்மை ஏற்படக் கூடும்

புலவர் திரு மு கணபதிப்பிள்ளை பேசுகையில், "புறநானூற்றையும், பிரான்ஸ் தேசத்திலே மொழிபெயர்த்து வெளியிடுகிறார்கள் ஆனால் தமிழ் நாட்டில் தமிழர்கள் தமது செல்வங்களைப்பற்றி ... நமது செல்வங்களின் அருமை தெரியவேண்டிய வெட்கக்கேடான நிலையில் நாம் இருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்

மாணவர்மன்ற சார்பில் பின்வரும் கோரிக்கைகள் திரு மு சிவசிதம்பரத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு ஆசிரியரல்லாத மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும்

வாணி கலைக்கழகத்தில் சங்கீத- நடன வகுப்புகளை ஆரம்பிக்க இளைஞர் கலாச்சாரப் பாடசாலையாகவோ அல்லது அரசாங்கத்திடமிருந்து நன்கொடை பெறக்கூடியதாகவோ மாற்றியமைக்க வேண்டும்

பண்டிதர் திரு க வீரகத்தி, பண்டிதை செல்வி வெ சாந்தநாயகி, பண்டிதை செல்வி மு பத்தினி பிள்ளை, திருவாளர்கள் அல்லிகோசி, பொ கணேசன், எஸ் பொன்னம்பலம் ஆகியோரும் பேசினர்

## முடிக்கலசங்கள் திருட்டு

கன்னாகம், திங்கள்

கடந்த சில வாரங்களாக கோவில்களிலுள்ள முடிக்கலசங்களை திருடர்களால் களவாடப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

நவாலி நாச்சிமார் கோவில் முடியும், சண்டிருப்பாய் அங்கணாமைக் கடவை மீனாட்சி அம்மை தாபமுடியும், சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி கோவில் பிள்ளையார் முடியும், சீரணி ஐயனார் கோவில் முடியும் திருடர்களால் சென்ற இரண்டு வாரங்களுக்குள் இரவில் களவாடப்பட்டுள்ளன. இதுபற்றி பொலிஸார் விசாரணைகள் நடாத்தி வருகின்றன.

## நாடும் நடப்பும்

டாக்டர் நாகநாதன் அடுத்த வாரத்தில் லண்டன் செல்லவிருக்கிறார், மிக ஆபத்தான சத்திரசிகிச்சை செய்து கொள்ளவே அவர் செல்கின்றார். சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றுப் பூரண சுகத்துடன் அவர் விரைவில் நாடு திரும்பவேண்டும். இதுவே நல்லோர் அனைவரினதும் பிரார்த்தனை,

* * *

'இரும்பு மனிதன்' எனப் பாராட்டுப்பெற்றவர் இருதய நோயினால்துரும்பாக இளைத்துவிட்டார். முந்தியமாதிரி ஓடியாடித் திரியும் சக்தி அவருக்கு இல்லைத்தான். என்றாலும் உணர்ச்சிவசப்படுவதும் ஆவேசத்துடன் பேசுவதும் அவருக்கே உரிய இயல்பு.

* * *

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் புதல்வி ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெறுவதற்காகச் சென்றாரல்லவா! அப்பொழுது பல திசைகளிலிருந்து பலபல கேள்விகள் எழுந்தன எப்படியோ அவர் ஒக்ஸ்போர்ட் போய்ச் சேர்ந்துவிட்டார். டாக்டர் நாகநாதனின் புதல்விக்குக் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் ஸ்காலர்ஷிப் வழங்கியிருந்தது. ஆனால் செலாவணிக் கொள்கைப் பிரச்னை'யை முன்னைய அரசாங்கம் கிளப்பியது. நாகநாதன் விடுவாரா! "உமது மகள் ஒக்ஸ்போர்ட் போகலாம், 'ஸ்காலர்ஷிப்' பெற்ற எனது மகள் போவதற்கு என்ன தடை!" என்று திருமதி பண்டாரநாயக்காவுக்குக் கடிதம் எழுதிவிட்டார், அப்போதைய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா நாகநாதனை அழைத்துப் பேசி ஒரு உடன்பாடுசெய்துகொண்டார்.

சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் டாக்டர் என் எம். பெரேரா 'நாகநாதன் மகள்' பற்றிக் குறிப்பிட்டிருப்பதால் லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன் பார்லிமெண்டில் திருமதி சிறிமாவுக்குத் தாம் எழுதிய கடிதம், அதற்கு அவர் எழுதிய பதில், டாக்டர் பெரேராவுடன் தாம் நடத்திய பேச்சு ஆகியவைபற்றி வெளியிடப் போகிறாராம்.

* * *

ஜூன் மாதத்தில் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் இலங்கையின் புதிய பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா கலந்துகொள்ளவிருக்கிறார், அங்கு இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியைச் சந்தித்து இந்திய வம்சாவளியினர் பற்றிய சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் குறித்துப் பூர்வாங்க ஆலோசனை நடத்துவாரென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

இந்திய எல்லைப்பகுதிகளில் புதிய பிரச்னைகள் தோன்றியிருப்பதால் திரு. சாஸ்திரி லண்டன் செல்வாரா!

— ஊர்சுற்றி

## புதிய பஸ் சேவை

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை, இ. போ. ச. டிப்போ மே மாதம் 3-ம் திகதியில் இருந்து நெல்லியடி கொடிகாமம் ரோட்டில் உள்ள அரசடிச்சந்தியில் இருந்து உப்பு ரோட்டுக்கூடாகச்செல்லும்பாடசாலை சேவை ஒன்றை புதிதாக ஆரம்பிக்கவிருக்கிறது.

கி மு சங்கம் எடுத்துக்கொண்ட இம்முயற்சியின் பேரிலும் உடுப்பிட்டி எம் பி திரு மு சிவசிதம்பரம் சமீபத்தில் பிராந்திய முகாமையாளருடன் தொடர்புகொண்டு இச்சேவையின் அவசியம்பற்றி வற்புறுத்திய தன் பேரிலும் இதற்கான ஏற்பாடுகள் விரைவாக்கப்பட்டன எனத் தெரிய வருகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் விமான நிலையங்கள் உஷார் படுத்தப்பட்டுள்ளன

# ஜம்மு காஷ்மீரிலும் நெருக்கடி நிலைமை

புதுடில்லி, ஏப்ரல் 26

**நேபாளத்துக்கு விஜயம்செய்துவிட்டு நேற்றிரவு புதுடில்லி திரும்பிய இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரியை பாதுகாப்பு மந்திரி சவான் சந்தித்துப் பாகிஸ்தானின் தீவிர நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.**

**இந்திய—பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்பட்டிருக்கின்றன. எல்லைப்பகுதியில் பெரியதொரு பாக். விமானநிலையமும் தயார்நிலையில் இருக்கின்றது. பாகிஸ்தானின் விமானநிலையங்கள் உஷார்படுத்தப்பட்டிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.**

**வாபஸ் பெற்றனர்**

கட்ச், சிந்து பகுதியில் நேற்று புதிய சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. ஆனால் "ஏற்பாடுகள்" பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது, கஞ்சர்கோட்டின் கிழக்கே எல்லையோரத்தில் நிலைகொண்டிருந்த பாகிஸ்தானிய துருப்புகள் அங்கிருந்து வாபஸ்பெற்று தூரமான இடத்துக்குச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது, இந்த நிலை முன்னர் இந்திய இராணுவத்தினரின் வசம் இருந்தது.

நேற்று எல்லைப்பகுதிகளில் அசம்பாவிதம் எதுவும் நிகழாவிட்டாலும் எல்லைநெடுகிலும் பாகிஸ்தான் துருப்புகள்விட்டு விட்டுச் சுட்டனர். கட்ச், சிந்து எல்லைப்பகுதிகளில் பாகிஸ்தான் துருப்புகள் தங்களது ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டு வருகின்றனர், இரண்டு கவசவண்டிகளும் பீரங்கிகளும் இவர்களுக்குப் பக்க பலமாக இருக்கின்றன. பாகிஸ்தான் முப்படைகளின் விடுமுறைகளும் ரத்துச்செய்யப்பட்டிருக்கின்றன என்றும் விடுதலையிலிருந்தவர்கள் திருப்பி அழைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

**ஜம்மு, காஷ்மீர் பகுதியில் நெருக்கடி**

கடந்த மூன்று தினங்களாக ஜம்மு, காஷ்மீர் பகுதிகளிலும் நெருக்கடி தோன்றியுள்ளது. இந்தப் பகுதிகளில் பாகிஸ்தான் துருப்புகள் எல்லைச் சம்பவங்களை தோற்றுவித்து வருவதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய-பாகிஸ்தான் எல்லைச்சண்டைகளை பிரிட்டனும் அமெரிக்காவும் நன்கு அவதானித்து வருவதாக லண்டன், வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

## சூ.வின் நிபந்தனை

ஜாகர்த்தா, ஏப் 26

வியட்னாமை விட்டு அமெரிக்கா வெளியேறுதவரை வியட்னாம் பிரச்சினை குறித்து பேச்சுக்கள் எதுவும் நடத்த முடியாது என்று சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இங்கு தெரிவித்துள்ளார்.

## பாட்மின்டன் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட பாட்மின்டன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டி முடிவுகள் வருமாறு:

**ஆண்களுக்கான தனி**

1, திரு ஓ.கே. தம்பிராஜா திரு டி. என். செல்லத்துரையை தோற்கடித்தார், (15-5, 15-0)

2, திரு சி. கணேசன் ஆட்டத்தில் கலந்து கொள்ளாததால் திரு என். குமாரசுவாமி வெற்றி பெற்றார்,

3, திரு எஸ். ஸ்ரீஸ்கந்தன் திரு டி.எஸ். விசாகராஜாவை தோற்கடித்தார். (13-15, 15-1, 15-7)

4 திரு பி. சி. விக்னராஜா திரு, கே. எஸ். நடராஜாவை தோற்கடித்தார் (15-11, 10-15, 15-7)

5, திரு ஓ.கே. தம்பிராஜா திரு சி. கணேசனை தோற்கடித்தார் (15-4, 15-10)

## "மற்றுமொரு கஷ்ட நிலைமை உருவாகுகிறது

### சீன உறவால் பாகிஸ்தானுக்கு துணிச்சல் ஏற்பட்டுவிட்டது"

—சாஸ்திரி

புதுடில்லி, ஏப். 26

"மற்றுமொரு ஆபத்தான நிலைமை நாம் சமாளிக்க வேண்டியிருக்கின்றது. ஒற்றுமையுடன் வெற்றிகாண்போம்" என்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அறிவித்துள்ளார்;

நேற்று மாலை அவர் புதுடில்லி வந்து சேர்ந்ததும் பாலம் விமான நிலையத்தில் நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டனர். அப்பொழுது திரு.சாஸ்திரி பாகிஸ்தானின் நடவடிக்கைகள் குறித்து கவலைதெரிவித்தார்.

இந்த விஷயம் குறித்து உடனடியாக நான் எதுவும் சொல்லவிரும்பவில்லை. நிலைமையை நன்கு பரிசீலனை செய்தபின்னரே நமது நடவடிக்கைகள் குறித்து கூறுவேன், இருந்தபோதிலும், பாகிஸ்தானின் தற்போதைய நடவடிக்கைகள் இந்திய-பாக் உறவை நிச்சயம் பாதிக்கும், பாகிஸ்தான், மிகவும் ஆபத்தான நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. பேச்சுவார்த்தைகளுக்குக் கூட வராமல் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மக்கள் தங்களது வேற்றுமைகளை மறந்து ஐக்கியத்துடன் இதை சமாளிக்க முன்வரவேண்டும்" என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

"பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் கூட்டுத் திட்டம் எதுவும் உண்டா?" என்று நிருபர்கள் கேட்டதற்கு; அப்படி எதுவும் இருப்பது பற்றி நாம் எதுவும் கூறவிரும்பவில்லை என்றும் ஆனால் இரு நாடுகளும் அடிக்கடி சந்திக்கின்றன என்றும் பாகிஸ்தானுக்கு இதனால் துணிச்சல் ஏற்பட்டு விட்டது என்றும் பிரதமர் சாஸ்திரி பதிலளித்தார்.



## அரசாங்கம் கவிழ்ந்தது

லண்டன், ஏப் 26

டொமினிக்கன் குடியரசு அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சிக் காரர்கள் ஆட்சியைக் கைப்பற்றி விட்டனர் என்றும் 1963-ம் ஆண்டு பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜனாதிபதி மீண்டும் பதவியிலமர்த்தப்படுவாரென்றும் கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்துள்ளனர்,

## திருக்குறள் மகாநாடு விழாச்சபை நிறுவப்பட்டது

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி பகுதியில் திருக்குறள் மகாநாடு நடாத்தும் நோக்கமாக ஓர் ஆரம்பக்கூட்டம் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்தில் திரு கா.பொ. இரத்தினம் தலைமையில்கூடிற்று, இக் கூட்டத்துக்கு கிளிநொச்சி தொகுதியில் உள்ள பல்வேறு இடங்களிலும் இருந்து பிரதிநிதிகள் சமுகம் கொடுத்தார்கள். இவ்விழாவை விரிந்த முறையிலும் சிறப்பாக நடாத்துவதற்குமாக ஓர் விழாச்சபை தெரிவு செய்யப்பட்டது.

பண்டிதர் கா. பொ, இரத்தினம், வணபிதா தேவராசா, வணபிதா தம்பிராசா, அருட்திரு கே வடிவேலு, சுவாமி திரு அ, சிவசுந்தரம் ஆகியோர் போஷகர்களாகவும், திரு. சிவகுருநாதன் தலைவராகவும் திரு மு. யோகலிங்கம் திரு ஓ. வி. வலவநாதன், திரு எஸ், ஜெயசிங்கம்; திரு வி. ஆனந்தசங்கரி, கிராம சபைத் தலைவர் கரைச்சி அன்ரன் க, பொன்னம்பலம், எஸ் முருகேசு உபதலைவர்களாகவும் திரு க. இராசையா, திரு த. நல்லதம்பி காரியதரிசிகளாகவும் திரு அ. தில்லைநாதன் இணைக் காரியதரிசியாகவும், திரு வே சி, கணபதிப்பிள்ளை தனாதிகாரியாகவும், திரு க, சோதிநாதன் துணை தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப் பட்டனர், 52பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப் பட்டது.

## இந்திய குற்றச்சாட்டுக்கு பாகிஸ்தான் மறுப்பு

கராச்சி, ஏப்ரல் 26

புதிய தாக்குதலை மேற்கொள்ளும் பொருட்டு தனது முப்படைகளுக்கும் உஷார் உத்தரவை பாகிஸ்தான் வழங்கியிருப்பதாக இந்தியா வெளியிட்ட குற்றச்சாட்டை பாகிஸ்தான் அரசாங்கம் மறுத்துள்ளது.

அப்படியான திட்டங்கள் எதையும் பாகிஸ்தான் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் இந்தியா வேண்டுமென்றே பதட்ட நிலையைத் தோற்றுவிக்கிறதென்றும் பாகிஸ்தான் அரசாங்கம் இங்கு வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வமான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## துங்கு-சுகர்ணோ சந்திப்பு

### அடுத்த மாதம் முற்பகுதியில் டோக்கியோவில் நிகழும்?

டோக்கியோ, ஏப்ரல் 26

அடுத்த மாத ஆரம்பத்தில் இந்தோனேஷிய அதிபரும் மலேசியப் பிரதமரும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தலாம் என்று இங்கு செய்திகள் கூறுகின்றன,

மலேசியப் பிரச்னை குறித்து பேச்சுக்கள் நடத்த வருமாறு ஜப்பான் பிரதமர் விடுத்திருந்த அழைப்பை இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ ஏற்றுக்கொண்டுள்ளார் மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளார்,

மலேசியப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் ஜப்பான் பிரதமர் துரித நடவடிக்கை எடுத்துவருகிறார்.

## "சாதிசமய பேதமின்றி பொது நலனுக்காக இயங்கவேண்டும்"

### கிராம முன்னேற்ற சங்கங்களின் பணி குறித்து கிளிநொச்சி எம். பி.

கிளிநொச்சி, திங்கள்

"கிராமமுன்னேற்றச் சங்கங்கள் அரசியல் கட்சிப்பற்றின்றி நடுநிலைமையோடு நாட்டின் நலன்கருதி செயல்பட்டு வருமானால் அச்சங்கங்களினால் கிராமங்கள் அளவுகடந்த பலனைப் பெறக்கூடியதாக இருக்கும். கிராமமுன்னேற்றச்சங்கங்களின் மூலம் அவ்வக்கிராமங்களின் தேவைகளை அரசாங்கத்திற்குத் தெரிவித்து அதன் மூலம் உதவிகளை ஒவ்வோர் பிரஜைக்கும் கிடைக்கச் செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு. கிராமமுன்னேற்றச் சமாஜத்தின் மூலமாக எல்லாக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் தேவைகளையும் ஒன்றுசேர்த்து அரசாங்க இலாகாக்களுக்கோ பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கோ சமர்ப்பிப்பதன் மூலம் இத்தேவைகள் மிக விரைவில் பூர்த்தி செய்வதற்கு அனுகூலமாய் இருக்கும். இச்சங்கங்களின் கூட்டுமுயற்சி பின்தங்கிய கிளிநொச்சித் தொகுதியில் மிகவும் அவசியமாகும்" என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க, பொ. இரத்தினம் கரைச்சி கிராமமுன்னேற்றச் சங்கங்களின் சமாஜக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார் கூட்டத்துக்கு திரு. த. நல்லதம்பி தலைமை வகித்தார்.

பண்டிதர் இரத்தினம் தமது உரையில் குறிப்பிட்டதாவது: "தனிப்பட்ட ஒவ்வொருவரின் சொந்தத் தேவைகளைப் பெறும் நோக்கமாக பாராளுமன்ற உறுப்பினரான என்னை உபயோகியாமல் பொது நன்மைக்காக என்னைப் பயன்படுத்துவீர்களென நான் எதிர்பார்க்கின்றேன். ஆதலால் இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராமமுன்னேற்றச்சங்கங்களிலும் சேவை மனப்பான்மை உடையவர்கள் ஒன்று சேர்ந்து எல்லாச்சங்கங்களையும் சரிவர இயங்கச் செய்ய வேண்டும். அவ்விதம் செய்வதனால் நான் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்புக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். இச்சங்கங்கள் கட்சி பேதங்களையோ சாதிசமய பேதங்களையோ பாராட்டாமல் பொது நோக்குடன் இயங்கினாலே நாம் எதிர்பார்க்கும் பலனை அனுபவிக்க முடியும்"

மேலும் இக்கூட்டத்தில் புயல் நிவாரணம் கிடைக்காதவர்களுக்கு புயல்நிவாரணம் கிடைக்கச் செய்தல், போக்குவரத்துவசதி, கல்வி, வைத்தியப்பகுதி முதலியன பற்றி ஆராய்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. காலனிப் பகுதிகளில் மரவரித் திட்டத்தைத் தடுக்க வேண்டுமெனவும் கூப்பன் அரிசி விலையை இப்பகுதிகளில் 80 சதமாக விற்கப்படுவதை 25 சதமாக விற்க ஒழுங்கு செய்ய வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கண்ணகியம்மன் திருவிழா

காங்கேசன்துறை, ஞாயிறு

தையிட்டியில் கோவில்கொண்ட கண்ணகி அம்பாள் ஆலயத்தில் 9-4-65-ல் வருடாந்த ஊர்வல விழாவும் 10-4-65-ல் அபிசேக ஆராதனைகளும் குளிர்த்தியும் விநாயகர் விழாவும் சிறப்பாக நடைபெற்றன. அடியார் குழுவினரால் தீக்குழிப்புகளும் கரக விளையாட்டுகளும், காவடி ஆட்டங்களும் நடைபெற்றன.

சத்தி வேலவர் விழாவும் மகேஸ்வர பூசையும் நடைபெற்றன, 13-4-65-ல் புதுவருட விழா வைபவங்களும் வருடாந்த பொங்கல் விழாவும் நடைபெற்றன. 15-4-65-ல் சித்திர குப்த விரதம் அனுஷ்டிப்போரின் ஆராதனைகளும், சித்திரை பூரணை வைபவங்களும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் "காரைக்காலம்மையார்" என்னும் சரிதம் பற்றியசொற்பொழிவும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்கு வேலை

கடந்த வாரம் நான் கேட்ட கேள்வி உங்களின் மூளைக்கு நல்ல வேலையைக் கொடுத்திருக்கிறது என்பதை கடந்த வாரம் 'மாணவர் மலருக்கு' வந்து குவிந்த தபாலட்டைகளும் கடிதங்களும் நிரூபித்துவிட்டன. சென்ற வாரம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நீங்கள் நான்கு வரிகளில் பதிலை எழுதி அனுப்பியிருக்கமுடியும். ஆனால் விடையெழுதிய பலர் இரண்டு மூன்று பக்கங்களில் எதையெதையோ கூட்டி பின்னர் கழித்து, பெருக்கி, பிரித்து எழுதியிருக்கின்றனர். ஆகையினால் விடைகளை சரி. பிழை பார்ப்பது எனக்குப் பெரிய பிரச்னையாகிவிட்டது. எப்பொழுதும் நீங்கள் கேள்வியை நன்கு புரிந்து சுருக்கமாக, தெளிவாக விடை எழுதப் பழகிக்கொள்ளவேண்டும். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் தங்களது பரீட்சைகளில் கேட்கப்படும் கேள்விகளுக்குத் தாறுமாறாக அதிகம் எழுதி ... புள்ளிகள் கிடைக்குமென்ற ... எண்ணத்துடன் எழுதுகின்றனர். இது கூடாது. 'மூளைக்கு வேலை' பகுதிக்கு எழுதும் நீங்களும் இதனைக் கவனத்தில்கொள்ளவேண்டும்.

ஹோட்டல் சிறுவன் கருதியது பிழை. சாப்பிட்டவர்களின் கணக்கு 25 ரூபாய். அவர்களிடம் திருப்பிக்கொடுக்கப்பட்ட பணம் மூன்று ரூபாய். சிறுவன் எடுத்தது, இரண்டு ரூபாய். மொத்தமாக (25+3+2) முப்பது ரூபாய்.

பின்வருபவர்கள் எல்லோரும் சரியாக விடை எழுதியுள்ளனர். இவர்களுக்கு எமது விசேஷ பாராட்டுதல்கள்.

சிவனேஸ்வரி சுப்பிரமணியம், சண்டிக்குளி; க. வீரசிங்கம், வரணி; மிருசுவில்; ஏ. நடராசா, பண்டத்தரிப்பு; இ. கணேசலிங்கநாதன், கந்தர்மடம்; எஸ். மாலதி, மிருசுவில்; சி. சண்முகலிங்கம், பிரதானவீதி. திருக்கோணமலை; ஞானத்தம்மா குசைப்பிள்ளை, கீரியந்தோட்டம், சில்லாலை; கே அரியநாயகம், கொழும்புத்துறை கிழக்கு; சி. கார்த்திகேயலிங்கம், மத்தனை தெல்லிப்பழை கிழக்கு; கி. கந்தராசா, ஆவரங்கால்; க. திருநாவுக்கரசு. தெல்லிப்பழை; க. இராசேஸ்வரி, கொழும்புத்துறை கிழக்கு; எஸ். தங்கராஜா, மிருசுவில்; சு. சுரேந்திரன், மாவிட்டபுரம்; புஷ்பம் கார்த்திகேசு, இராசேந்திரம் குளம், வவுனியா; சபா. புஷ்பநாதன், சுன்னாகம்; பொ. அம்பிகைபாகன், திருநெல்வேலி; ஜே. திருக்குமார், பருத்தித்துறை; இ சிவராசா, கச்சாய் தெற்கு; ஜெ. சிவக்குமார், பருத்தித்துறை; இ. முருகதாஸ், காரைநகர் வடக்கு; பரமேஸ்வரி பூபாலன், இரணை இலுப்பைக்குளம், வவுனியா; மு. கதிர்காமநாதன், யாழ்ப்பாணம்; தி. சிவநாதன், சுழிபுரம்; வி. ராதாகிருஷ்ணசர்மா, சுழிபுரம்; சுப்புலக்ஷ்மி அருணாசலம், கந்தர்மடம்; ஈஸ்வரி. மூளாய்; ஜெ. ஜெயக்குமார், பருத்தித்துறை; ஐயன்னா முருகையா, குரவத்தை; செல்வராணி ஞானப்பிரகாசம், அல்வாய்; செ. ஸ்ரீரங்கநாதன், அச்சுவேலி தெற்கு; இ மங்களேஸ்வரதேவி, அல்வாய் தெற்கு; தி. இரத்தினசபாபதி, இணுவில்; இ. அபயகரன், அருள், அச்சுவேலி; க. சுந்திரலிங்கம், நல்லூர்; மா. வேர்ஜெர்ணெண்டோ, குருநகர்; த பாலேந்திரன் துணுக்காய்; சா. சாந்தகுமாரி, கந்தர்மடம்; ச. குணபதியம்மா, நயினாதீவு மேற்கு; வே. பூபாலசிங்கம், மந்துவில் மேற்கு; நா. செல்வராசா, முரசுமோட்டை; தி. சத்தியபாமா, யாழ்ப்பாணம்; ச. சங்கரநாதன், பூநகரி; ச. தனிநாயகம், சிவநகர்; மு. முத்துலிங்கம், கைதடி.

கடந்த வாரம் ஓரளவு கஷ்டமான கேள்வி இடம்பெற்றதால் இம்முறை சுலபமான கேள்வி வெளியாகின்றது உங்கள் கைத்திறனைக் காட்டுங்கள். இதோ இவ்வாரக் கேள்வி.

**கேள்வி மண்டலம்**

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இதுவரை (இப்பொழுது உள்ளதுடன்) எத்தனை அரசாங்கங்கள் பதவியேற்றிருக்கின்றன? தற்பொழுது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தில் புதிய பதவியைக்கொண்ட மந்திரிஒருவர் இருக்கின்றார். அவர் யார்? இதற்குரிய சரியான விடைகளைத் தபாலட்டையில் எழுதி, எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் 'மாணவர் மலர்' ஈழநாடு. த. பெ: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

— சாந்தா.

# நலிந்தோரின் நன்னாள்

—“வாகீஸ்”—

'பட், பட், படார்!'


தூரத்தே எழுந்த அவ்வொலி, அந்த வட்டாரத்தையே கிடுகிடுக்கவைத்தது அது என்ன ஓசை? தொடர்ந்து கேட்டது, மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம்! விடயமறிய பெருவாசலை நோக்கி விரைந்தேன்...... சிறிது தொலைவிலே ஏதோ ஓர் ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. 'அது என்ன ஊர்வலம்?' என அறியு ஆவல் அகத்தில் மேவிட அமைதியாகக் காத்து நின்றேன். அது அருகில் வரும்வரை! "தொழிலாளி வாழ்க! எமது நன்னாள் மேதினமே!!" போன்ற கோஷங்கள் வானைப் பிளந்தன!

"அட—; மேதினம் என்பதையே மறந்துவிட்டேனே!" பரவயில்லை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதல்லவா?

ஆம் எதிர்வரும் சனிக்கிழமை மேதினம்! நாட்டுக்காக உழைக்கும் உழைத்து நலிந்தோரான பாட்டாளி சமுகத்தின் நன்னாள்! பாட்டாளியின் வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய பொன்னாள்! பாரின் பல பாகங்களிலும், பாட்டாளியால் வேறுபாடின்றி கொண்டாடப்படும் புனித நன்னாள்!.! ஒரு நாட்டின் பொருளாதாரமே பாட்டாளியில் தங்கியுள்ளது' பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டால், மக்கள் மனதிலே மகிழ்ச்சி ஏது? தொழிலாளி இன்றேல் இம்மையில் இன்பம் இல்லை என்று கூறிவிடலாம். அத்தகைய தொழிலாளிக்கு அன்று நடந்தது... கொடுமை! தமக்கு நாயாக உழைத்து, தாம் கலாசல் இட்ட கட்டளையை தலையாலே செய்வதற்கே தொழிலாளி பிறந்துள்ளான் என்றுதான் அன்றைய முதலாளிகள் எண்ணினர். 'ஞாயிறு' கூடத் தன் காலைப் பணியைச் செய்யப் புறப்படுமுன்னரே பாட்டாளி புறப்படுகின்றான், தன் முதலாளி வீட்டை நோக்கி அவன் தன் கடமையை தொடருகின்றான். பொறுமையெனும் நகையணிந்து பொறுப்புடன் பணியாற்றுகின்றான். ஏன்? அவன் என்ன மரமா? இல்லை மனிதன்தான்! அவன் பொறுமையை கைக்கொள்ளாது சினந்து சீறினால்...... அவனுக்கு சம்பளம் இல்லை வேலையில்லை. வேலையே போய்விடால்......அவனையே நம்பியுள்ள அவன் குடும்பம்? அதுமட்டுமா? உடலினின்றும் உதிரம் கசியும்வரை கசையடி கூட கிடைக்கும் அவனுக்கு! எவ்வளவு நாளைக்குத்தான், அவனால் கஷ்டப்பட முடியும்? தொழிலாளியின் தன்மானம் தலை தூக்கியது. ஒற்றுமையை உருவாக்கினான் மதம், மொழி போன்றகொடிய வேற்றுமை 'நோய்களை' மறந்து 'ஒற்றுமை' என்னும் ஒரு குடைக்கீழ் ஒன்றுதிரண்டது பாட்டாளி சமுதாயம்! உரிமை வேண்டி போராடினர்! அவர்களின் உரிமைப்போராட்டம் ஆரம்பமாகியது அமெரிக்காவில்தான். 'ஒற்றுமை'யின் முன் முதலாளிகள் மண்டியிட்டனர்! அந்நாள் பாட்டாளியின் பொன்னாள்; 'மேதினம்' என்பதும் அந்நாளே! மேலும் ... குறைக்கப்பட்டது.



# மாணவர் மலர்



புரட்சிக்கவிக்கு அஞ்சலி

## ‘எங்கெங்கும் காணினும் சக்தியடா’

—மணிமொழி—

தமிழன்னையின் எழில் மேனியை அழகுத் தமிழ் பாமாலை சூடி அலங்கரித்தவர்களில் பாரதிதாசனும் ஒருவராவர், வீறு நடைபோட்டு தமிழ்த்தாகத்துடன் புரட்சிக் கவிதை பாடியவர் பாரதிதாசன்

இருபதாம் நூற்றாண்டிலே இணையற்ற கவிஞராய் விளங்கினார் சுப்பிரமணியபாரதியார், பாரதியாரின் வாரிசாக உதித்தவரே பாரதிதாசன். இவர் 1891-ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 29-ந் திகதி புதுச்சேரி உயர்குடி வணிகர் கனகசபை முதலியாருக்கு இரண்டாவது புதல்வனாகப் பிறந்தார் இவரின் இயற் பெயர் சுப்புரத்தினம், சுப்புரத்தினம் இளமையிலே தமிழார்வத்துடன் திகழ்ந்தார். இளமையிலே பிரெஞ்சு மொழிக் கல்லூரியிலே பயின்றும், தாய் மொழிப் பற்றிலும், தமிழ்ப் பற்றிலும கூடிய ஆர்வம் காட்டினார் 16-வது வயதிலே கல்வே கல்லூரியிலே தமிழ்ப் புலமை தேர்வு கருதிப்புகுந்தார். இவரது அபாரமான திறமை, முயற்சியினால் அக் கல்லூரியிலே கடமையாற்ற முடிந்தது.

ஒருநாள் ஒரு திருமண விழாவிலே கலந்துகொண்டார் சுப்புரத்தினம், அங்கே பாரதியாரின் நாட்டுப்பாடல் ஒன்றை வெகு உற்சாகமாகப் பாடி முடித்த சுப்புரத்தினத்தை பாரதியார் சந்திக்க நேர்ந்தது அந்த விழாவே சுப்புரத்தினத்தை பாரதிதாசனாக மாற்றியது. "எங்கெங்கும் காணினும் சக்தியடா"...என்ற 16 வரி பாடலே பாரதிதாசனின் முதல் பாடலாகும். பாரதியாரின் 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலே பாடல் மிக்க அறிமுகத்துடன் பிரசுரமாகியது.

தமிழ் என்றால் 'இனிமை' என்றார் 'காலின் செல்வர்' ஆனால் தமிழ் என்றால் வீரம் என்பார் பாரதிதாசன் பாரதிதாசன் சாதி, மத, இன பேதத்தை அறவே வெறுத்தார், உயர்ந்த எண்ணங்களும், விரிந்த கொள்கைகளும் கொண்டவர். கொள்கைக்காகப் போராடும் குணமும், மிக்க நகைச்சுவையும் நிரம்பியவர். இயற்கையின் எழிலிலே மாந்தித்திளைத்த கவிஞர் தனது கவிகளில் இயற்கை இன்பத்தை அள்ளி சொரிந்துவிட்டார். இவரின் கவிதைகளில் புரட்சி மிளிர்கின்றது. இதனால் "புரட்சிக் கவிஞர்" என்றழைக்கப்பட்டார். எழில் மிக்க இனிய உவமைகளை இவரது கவிதைகளிற் காணலாம்: 'நிலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலவென்று காட்டுகின்றாய்'... என்ற பாட்டில் இவரது உள்ளம் நிறைந்த கற்பனையைக் காணமுடிகின்றது. இவரது கவிகளில் அழகும், சுவையும், வீரமும், உணர்ச்சியும் வீறு நடைபோடும், இவ்வாறு தாய் மொழிப் பற்று. சமுதாயச் சீர்திருத்தம், இலக்கியம், கலை அழகு கருவிகளைக் கொண்டு தமிழன்னையை அலங்கரித்தார் பாரதிதாசன். 21-4-64-ல் பாரதிதாசன் இறைவனடி எய்திவிட்டார்.

அறிவுச் செல்வம்

## பயிர்ச்செய்கைக்கு ஏற்ற இடம்

—பொ. கனகநாயகம்—

மண்ணின் தன்மையைப் பற்றி இங்கு மேலும் ஆராய்வோம்.

பாறைகள் சிதைவடைந்து மண் அணுக்களாகி, அவ்வணுக்களின் கூட்டமே மண். மண்ணில் லோகப் பொருள்களும் தாதுப் பொருள்களும் கலந்துள்ளன. அவையாவன (உலோகப் பொருட்கள்) கோண்பிளேன்ட், களி மூலம், மணல் மூலம் (வெண்பாசி), (தாதுப் பொருட்கள்): பிராணவாயு, இலவணவாயு, சாம்பற்காரம், நிபாக்கினி, கன்னமூலம், இரும்பு, மாக்கற்பஸ்பம், கெந்தகம். சலவாயு. (பயிர்வளர்ச்சிக்கு அவசியமற்ற தாதுப்பொருள்கள்): குமிளாறின், படிகதாது, வெட்டநாகம், படிகாரம்.

மண்ணின் நிறையளவுகள் ஒவ்வொரு பகுதியிலும் வித்தியாசமடைகின்றன காட்டு மண் தாவர வர்க்கங்களின் சிதைவுகளின் இலேசாக உள்ளதால் நிறைகுறைகின்றது. தோட்ட மண்ணும் அவ்வாறே தூர்வைப்படுத்தப் பண்பட்டமை, பசளை வஸ்துக்கள் கலந்தமைகளினால் பாரநிறை குறைகின்றது. ஒரு கன அடி சாதாரண மண் நிறை: 100ஞத்தல் ஒரு கன அடி தோட்ட மண் நிறை: 70 ஞத்தல். ஒரு கன அடி காட்டு மண் நிறை: 30 ஞத்தல்.

மண்ணில் பின்வரும் பற்பல நிறுகளின் வகைகள் எந்த இடத்து மண்ணிலும் கலந்து காணப்படுகின்றன. அவைகளாவன:-

தாவரவர்க்கப் பதார்த்தங்கள், வண்டற்களி, களி, மணல் என்பன உள. இத்தரை மண் வகையை நான்கு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: மணல் தரை (80 வீதம் மணல்). இருவாட்டி மணற்தரை (60 வீதம் தொடக்கம் 70 வீதம் வரை மணல்). இருவாட்டிக் களித்தரை (30 வீதம் தொடக்கம் 40 வீதம் களி). களித்தரை (60 வீதத்துக்கு மேல களி) இவற்றுடன் "இருவாட்டி மண்தரை" என்னும் வகையைச் சேர்த்தவை ஐந்தாகக் கொள்வாம். ஆனால் இத்தரை சரியாக ஒரு இடத்தில் காண்பது அரிது.

**மணற்றரை**

மணல் தரையில் 80 வீதம் மணல் இருக்கும். மணல் அணுக்கள் பெரிதாக இருப்பதனால் நீர்வடிக்து காய்ந்துவிடும். மண் அணுக்கள் விவசாயவிருத்திக்கு மிகவும் சிறிதாக அமையவேண்டும். கோடையில் மணலில் பயிர் வளர்ச்சி குன்றிவிடும். மணலில் வெப்பரல் அல்லது மணல் மூலம் இருப்பதினால் உஷ்ணம் அதிகப்படுகின்றது. இதனால் வெப்பச் சேகரிப்பு மண் என்று அழைக்கப்படுகின்றது.

**மணல் தரையை திருத்துதல்**

மணல் அணுக்களைச் சிறிதாக்குதல் வேண்டும். இது கஷ்டமானது. இதற்கு பசுந்தாளப் பசளையைத் தாட்டால் நன்று. இத்துடன் எருக்கள் போடவேண்டும். இதற்கு தேவையான அதிக நீரை ஊற்றல் வேண்டும்; அடிக்கடி உழவு செய்வது நல்லது இயற்கைப் பசளைகள் போட்டால் துவாரங்களைக் கட்டுப்படுத்தும்.

மாரிகாலத்தில்வெண்காயம், மிளகாய், செய்கை நல்லது. இத்துடன் கோழிவளர்ப்புக்கு இத்தரை மிகவும் வாய்ப்புள்ளது.

**இருவாட்டி மணல்தரை**

இத்தரையில் 60 தொடக்கம் 70 வீதம் வரை மணல் காணப்படும். நீரினையும், உணவையும் (பதுவையாக) வைத்திருக்கக் கூடியது மணலிலும் இத்தரை நல்லது. தோட்டச் செய்கைக்கு உகந்தது. பசுந்தாள்பசளை, எரு வகை போட்டுப் பண்படுத்தல் நல்லது. இத் தரையில் சாகுபடி செய்யக்கூடிய பயிர்களாவன புகையிலை, சாமி, குரக்கன், பூசனி, புடோல், தக்காளி, முதலியன நன்றாகச் செய்யலாம்.

**இருவாட்டி களித்தரை**

இந்த நிலத்தில் 30 தொடக்கம் 40 வீதம் களியிருக்கும், 50 வீதம் வரை களி உண்டானால் "கனத்த இருவாட்டித் தரை" என்று சொல்லப்படும். இந்த இருவாட்டி களித்தரையில் 25 தொடக்கம் வீதம் 30 வரை மணல் இருக்கும். இதனால் ஓர் அளவு களித்தரையிலும் துவாரம் பெரிதாகவும், இலேசான மண்ணாகவும் இருக்கும். சாம்பற்காரம் அதிகம் உண்டு. இவ்நிலம் பசளைப் பொருட்களை இழக்காது தண்ணீர் தேங்காது அதி விரைவில் ஓடவும் மாட்டாது. நீர் ஊற்றும் உண்டு. நெற்செய்கை செய்யலாம் வேறுபயிர் இனங்களும் வளரும்.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிர்ச்செய்கைக்கு...

(4-ம் பக்க தொடர்ச்சி)

**களித்தரை**

இத்தரையில் 60 வீதம் களி இருக்கின்றது. இத்தரையில் உலோகப் பொருள்கள் உண்டு அவையாவன: கன்னக்கல், கழிமூலம், கோன்பிளேன்ட்,

**களித்தரையை திருத்துதல்**

இத்தரையில் மணல் சேர்ப்பின் இருவாட்டி மண்ணின் தன்மைக்குக் கொண்டுவரலாம். ஆனால் மிகவும் செலவு ஏற்படும் பசுந்தாள் பசளைகள், எருக்கள் போடவேண்டும், சுண்ணாம்பு போட்டால் பொடி மண்கள் திரண்டு இடைவெளிகள் ஏற்பட அனுகூலமாகும். களி நீங்கும், நீர் வடியும். சில களித்தரைகளில் இரும்பு பஸ்பம் இருக்கக்கூடும். அம் மண் செம்பஞ்சள நிறமாய் இருக்கும். சாம்பற்காரமும் ஏராளம் உண்டு. இதில் பயிர்ச்செய்கை செய்யலாம். பெரும்பாலும் தானியப் பொருட்கள் செய்வது நல்லது. இந்நிலம் மணல் நிலத்தைப்போல் அவ்வளவு பயனற்றதென்று சொல்ல இடமில்லை. ஆனால் இதில் பதம் தப்பி உழுவதை நிறுத்தல் வேண்டும். இதனால் மண் இயல்பு அறுந்துவிடுகிறது அமுச்செறிவு ஆகிவிடும். பயிர் வளர்ச்சி குன்றிவிடும். களித்தரையின் குணம் மேலே படை படையாக எழும்பும்.

(தொடரும்)

**REGAL – JAFFNA**
NOW SHOWING
Anthony Quinn
in
REQUIEM
for a
HEAVY WEIGHT

# சங்கானை வாலிபர் சங்க விளையாட்டு போட்டிமுடிவுகள்

சுழிபுரம், திங்கள்

சங்கானை இந்து மூற்போக்கு வாலிபர் சங்க வருடாந்த விளையாட்டுப் போட்டி சங்கானை பாரதி அரங்கில் நேற்று மாலை நடைபெற்றது. திருவாளர்கள் த. லோகநாதன், க. நகுலநாதன் ஆகியோர் காப்பாளராகக் கடமையாற்றினார்கள் விளையாட்டுப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:–

உதைபந்தாட்டத்தில் பாரதி இல்லம் வெற்றிபெற்றது. க. மகேந்திரன் சிறந்த பந்தாட்ட வீரராகவும், ஆ. தவராசா சிறந்த தடுப்பாட்ட வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

**நீளம்பாய்தல்**

கீழ்ப்பிரிவு:– சி ஸ்ரீராம், ஆ சூரியகுமார், வே பரிபூரபவன்

மத்தியபிரிவு:– வே திகலொளிபவன், சி சிவலோஜன், ஆ தவராசா

மேற்பிரிவு:– த பாலச்சந்திரன், சி திலகதாஸ, சி ரவீந்திரன்

அதிமேற்பிரிவு:– த நவரத்தினராசா, மூ பரமானந்தம், ந மகேந்திரன்

**உயரம்பாய்தல்**

கீழ் பிரிவு:– சி ஸ்ரீராம், ஆ சூரியகுமார், இராசரத்தினம்

மத்தியபிரிவு:– வே திகலொளிபவன், கு புஷ்பநாதன், மூ உதயசந்திரன்

மேற்பிரிவு:– து தேவராசா, ந ஜெகநாதன், து உதயகுமார்

அதிமேற்பிரிவு:– சி சிவகுமார், மா மகாலிங்கம், கு சண்முகரத்தினம்

**குண்டெறிதல்**

மேற்பிரிவு:– ஆ ஸ்ரீஸ்கந்தராசா, ந ஜெகநாதன், த பாலச்சந்திரன்

**100 யார் ஓட்டம்**

அதிமேற்பிரிவு:– என் நவரத்தினராசா, எம் மகாலிங்கம், பாலசிங்கம்

மேற்பிரிவு:– ஸ்ரீஸ்கந்தராசா, சி தேவராசா, எஸ் திலகதாஸ

மத்தியபிரிவு:– உதயச்சந்திரன், சிவலோஜன், புஷ்பநாதன்

கீழ்ப்பிரிவு:– ஸ்ரீராம், சிவராசா, சூரியகுமாரன்

**220 யார் ஓட்டம்**

அதிமேற்பிரிவு:– என் மகேந்திரன், சிவகுமார், மகாலிங்கம்

மேற்பிரிவு:– ஸ்ரீஸ்கந்தராசா, சி தேவராசா, சி பாலச்சந்திரன்

மத்தியபிரிவு:– மயில்வாகனம், தவராசா, வடிவேல்

**440 யார் ஓட்டம்**

அதிமேற்பிரிவு:– நவரத்தினராசா, மகேந்திரன், பாலகிருஷ்ணன்

**ரொட்டிப் போட்டி**

கீழ்ப்பிரிவு:– சண்முகநாதன், சிவராசா, சி காந்தலோசன்

**440 யார் ஓட்டம்**

மேற்பிரிவு:– ஸ்ரீஸ்கந்தராசா திலகதாஸ ஜெகநாதன்

மத்தியபிரிவு:– திகழ்ஞானபவன், புஷ்பநாதன், மயில்வாகனம்

**குண்டெறிதல்**

அதிமேற்பிரிவு:– கு சண்முகரத்தினம், ஆ விக்னேஸ்வரன் செ விவேகானந்தன்

**மூன்று கால் ஓட்டம்**

கீழ்ப்பிரிவு:– உருத்திரகுமார், சிவராசா, பரிபூரவன், சண்முகநாதன், சிவபாலன், பாலசுந்தரம்

**தடை ஓட்டம்**

அதிமேற்பிரிவு:– கு சண்முகரத்தினம், பா கிருஷ்ணன், சிவகுமார்

மேற்பிரிவு:– உதயகுமார், பாலச்சந்திரன், சிவதாசன்

மத்தியபிரிவு:– சி மகேசன், சி சிவலோகன், ஜெயரத்தினம்

கீழ்பிரிவு:– வ சண்முகதாசன், ச சிவபாலன், பி சிவராசா

**880 யார் ஓட்டம்**

அதிமேற்பிரிவு:– நவரத்தினராசா, பாலகிருஷ்ணன், குணரத்தினம்,

மேற்பிரிவு:– உதயகுமாரன், திலகதாஸ, ரவீந்திரன்

**அஞ்சல் ஓட்டம்**

மேற்பிரிவு:– ஸ்ரீஸ்கந்தராசா திகழ் ஒளிபவன்

**சங்கீதக்கதிரை:–**

கீழ்பிரிவு:– சண்முகநாதன், விமலதாசன், இராசரத்தினம்

**ஒரு மைல் ஓட்டம்**

நவரத்தினராசா, சண்முகரத்தினம், பாலகிருஷ்ணன்

## ஏழாலையில் தமிழ் விழா

சுழிபுரம், திங்கள்

ஏழாலை வடக்கு கலாநிலைய சனசமூக நிலையத்தினர் மே மாதம் 1, 2 திகதிகளில தமிழ் விழா ஒன்றை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளனர். முதலாம் நாள் நிகழ்ச்சிகள் நடேசபிள்ளை அரங்கிலும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தாமோதரனார் அரங்கிலும் நடைபெறும். உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் விழாவை தொடக்கி வைப்பார். திரு. க. நடேசபிள்ளையின் படத்தை வலிவடக்கு காரியாதிகாரி திரு. தி முருகேசம்பிள்ளை திரைநீக்கம் செய்து வைப்பார். முதல்நாள் விழா கனக செந்திநாதன் அவர்கள் தலைமையிலும் இரண்டாம் நாள் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையிலும் நடைபெறும். வித்துவான் வேந்தனார் தங்கம்மா அப்பாக்குட்டி மா வேந்தன் ஆகியோர் விரிவுரை ஆற்றுவார்கள். ... ... ம் நடைபெறும்.

# வகுப்புவாத மனப்பான்மை இளைஞனின் உயிரைக்குடித்தது

## மரணவிசாரணை அதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

"கடந்த ஒன்பதாண்டுகல் இந்நாட்டை ஆட்சி செய்த அரசாங்கம் வளர்த்துவிட்ட தமிழர்–சிங்களவர் என்ற வகுப்புவாதம்தான் இவ்விளைஞனின் உயிரைப் பலிவாங்கி விட்டது" என யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. அ. அமிர்தலிங்கம் மரண விசாரணையொன்றின்போது தெரிவித்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த எஸ். மகாதேவா (20 வயது) என்ற இளைஞனின் திடீர் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் முடிவில்தான் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

இறந்தவரின் தந்தையார் என் சரவணமுத்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

காலமான எனது மகன் தனது மாமனார் அம்பலம் சின்னத்துரையுடன் சேர்ந்து காய்கறி வியாபாரம் செய்து வந்தார். எனது மகன் தனது மாமனாரது இடமான சண்டிலிப்பாயிலுள்ள வீட்டுக்குச் செல்வார்; சில சமயங்களில் அங்கேயே தங்குவார், மாமனுக்கு இராசநாயகி என்ற ஒரு மகள் இருக்கிறார். அவருடன் எனது மகன் காதல் கொண்டிருந்தார் என்று ஏற்கனவே அறிந்திருந்தேன். நான்கு மாத காலத்துக்கு முன்னால் எனது மகன் இராசநாயகியைத் திருமணம் செய்யப்போவதாகவும், அனுமதி தரும்படியும் என்னிடம் கேட்டார். நான மறுத்துவிட்டேன். அத்திருமணத்துக்கு நான் மறுப்புத் தெரிவித்ததற்குக் காரணம். இராசநாயகியின் பேத்தியார் (தாயாரின் தாயார்) ஒரு சிங்களவர் என்பதுதான், எனது மகன் சில நாட்களுக்கு முன்னாலும் வந்து திருமணத்துக்கு அனுமதி தரும்படி கேட்டார், நான் மறுப்புத் தெரிவித்தேன், நேற்றையதினம் நான் எனது வீட்டிலிருந்தபோது அம்பலம் சின்னத்துரை என்னிடம் வந்து எனது மகன் நச்சுத் திராவகம் அருந்திவிட்டதாகத் தெரிவித்தார்.

அம்பலம் சின்னத்துரையின் மனைவி நாகம்மா சாட்சியமளிக்கையில், இறந்தவர் தனது மருமகனென்றும், மூன்றுமாத காலத்துக்கு முன்னால் தனது மகளைத் திருமணம் செய்யப் போவதாகத் தன்னிடம் கேட்டாரென்றும், அவரின் பெற்றோர்களின் அனுமதியைப் பெற்றுவரும்படி தான் கூறிய

(6-ம் பக்கம் பார்க்க)

## வானொலி நிகழ்ச்சிகள்

**சனி 27-4-65**

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 பக்திப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 திரைகானம், 1-00 சதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைப் படஇசை.

இரவு: 6-15 கிராமிய நிகழ்ச்சி, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 வயலின்—எஸ். சோமஸ்கந்தசர்மா, 7-30 மத்தாப்பு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாகஸ்வரம்.

**வரி விளம்பரம்**

**தேவை**

சேர்குனேசன் மனேஜராகக் கடமைபுரியக்கூடியவர் தேவை. சம்பளம் ரூபா 125/- பிணைப்பணம் ரூபா 1000/- (ரொக்கம்) உடனே செலுத்தக்கூடியவர் 29-4-65 வியாழக்கிழமை காலை நற்சான்றுப் பத்திரங்களுடனும் நேரில் சமூகம் கொடுக்கவும், உரிமையாளர்: தமிழ்சேசன் பத்திரிகைக்காரியாலயம், 50, பெங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 37

மூளாய் ஆஸ்பத்திரியிலிருந்து மூன்று மைலுக்குள் நல்ல தண்ணீர் மற்றும் வசதிகளுடன் கூடிய வீடு தேவை. வாடகை மற்றும் விபரங்களுடன் எழுதவும், விளம்பரதாரர்; கூட்டுறவு ஆஸ்பத்திரி மேற்பார்த்து, மூளாய். 89

**தொய்வு, கசம், நீரிழிவு, பென்ஸில் முதலிய பல**

கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர் வைத்தியர் பரிபூரணனந்தர், கைலை சபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

உ

## திருமண அழைப்பு

நிகழும் விசுவாவசு ஹூ சித்திரை மீ 16-ந் திகதி (29-4-65) புதன்கிழமை இரவு 3-34 தொடக்கம் 4-25 வரை நிகழும் உத்திரட்டாதி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய மேடலக்கின சுபமுகூர்த்தத்தில்;

எமது சகோதரன் திருவளர் செல்வன்

**தர்மராஜாவுக்கும்**

(ஆசிரியர் வைத்தீஸ்வரவித்தியாலயம், வண்ணார்பண்ணை; யூனியன் கல்லூரி ஆசிரியர் திரு. அ. குலசேகரம்பிள்ளை அவர்களின் சகோதரர் மகன்)

சரணவாய் வடக்கு

திரு. A சிதம்பரம்பிள்ளை அவர்களின்

(O. A. மன்னார் கச்சேரி)

மருமகள் திருவளர் செல்வி

**கமலேஸ்வரிக்கும்**

(ஆசிரியை 'பேகஸஸ்' உயர்நிலைப்பள்ளி, இரத்தினபுரி; ஹாட்லிக்கல்லூரி கணிதப்பேராசிரியராயிருந்த திரு. மயில்வாகனம் அவர்களின் மகள்)

திருமணம், நடாத்தத்திருவருளை துணைக்கொண்டு நிச்சயித்திருப்பதால், அத்தருணம் குடும்பத்தினருடன் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி உறவினர்களையும் நண்பர்களையும் பணிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்

இடம்: செல்வச்சந்நிதி முருகப்பெருமான் ஆலயம்.


**தனிப்பட்ட அழைப்பு எதுவும் இல்லை**

வரவேற்பு உபசரணை, வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

"சிங்கவாசா"
வட்டுக்கோட்டை.

கு. ஜெயசிங்கமும் பாரியாரும்

**சிங்லி** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **ராஜ்** (நீர்கொழும்பு)
**நவா** (கும்பளித்தெரு) **விஜயா** (மட்டக்களப்பு) **மொடர்ன்** (பண்டாரவளை)
**விஜிதா** (ஹட்டன்) **தீபாவளி** (நுவரேலியா) **ஜூப்பிட்டர்** (குருநாகலை)
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
**வேட்டைக்காரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப்புலவருக்கு கௌரவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

'பாடசாலைகளில் தமிழிசையை, மாணவர்களிடையே பயிற்றுவதற்கான போதிய வசதியற்றிருக்க இந்நாட்டில் இப்படிப்பட்ட ஒரு குரு சபாக்கள் மூலந்தான் தமிழிசை வளர்க்கப்பட்டு வந்தன' வென்று ரஸிக ரஞ்சன சபாவின் கடைசிநாள் இசைவிழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப்பேசிய வடமாகாண உதவி வித்தியாதிபதி திரு எஸ். தனிகாசலம் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் சன்மார்க்கபோதன ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விசைவிழாவில் இசைப்புலவர் திரு சி. செல்லத்துரை பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். அவருக்குப் பொன்னாடை போர்த்து, அவரது திறமையைப் பாராட்டி உதவி வித்தியாதிபதி பேசுகையில் ரஸிகரஞ்சன சபாவை உருவாக்குபவர்களில் முன்னணியில் நின்ற இசைப்புலவர் சேவை பாராட்ட வேண்டிய தொன்றென்றும், ஈழத்தில் தமிழிசையை நன்கு கற்று கைவரப்பெற்றவர்களில் முன்னணியில் நிற்பவரென்றும் சொன்னார்,

இசைப்புலவர் சி, செல்லத்துரை தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தமிழிசைக்குக் களங்கம் ஏற்படாதவகையில் ரஸிகரஞ்சன சபாவின் வளர்ச்சிக்காக என்றும்போல இனிமேலும் உழைப்பாரெனவும் தனக்கு அளிக்கப்பட்ட இப்பாராட்டு ஒவ்வொரு இசைக்கலை வல்லுனர்களுக்கும் அளிக்கப்பட்ட பாராட்டுதல் என்றும் சொன்னார்.

## வகுப்பு . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயும் சொன்னார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் தமது மகனைத் திருமணம் செய்வதற்கு தமது தந்தையார் மறுப்புத் தெரிவித்துவிட்டாரென்றும் கூறி நேற்று காலை தங்களது வீட்டுத் தெருவில் கலைந்சென்றவர் பச்சைப் போத்தல் ஒன்றை வைத்துக்கொண்டு நச்சுத் திராவகம் அருந்தியதாகக் கூறினார்.

டாக்டர் பரமதாசன் சாட்சியமளிக்கையில், நேற்று மாலை ஆறு மணியளவில் இறந்தவரைத் தான் பரிசோதித்ததாகவும் அவர் நச்சுத் திராவகம் அருந்தியது பரிசோதனையின் போது தெரியவந்ததாகவும் தெரிவித்தார்.

நஞ்சு அருந்தி தற்கொலை என மரண விசாரணை அதிகாரி திரு. அ. அமிர்தலிங்கம் தீர்ப்பளித்தார்.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்குவந்து இன்னும் ஆறுமாத காலம் சென்றிருந்தால் இப்படியான தற்கொலை நிகழ்ந்திருக்காதென்றும் பெண்ணினுடைய பேத்தியார் சிங்கள மாது என்ற காரணத்தால்தான் இறந்தவரின் தந்தையார் அவருக்கு அப்பெண்ணை திருமணம் செய்ய அனுமதிக்கவில்லையென்றும் இப்படியான இனவேற்றுமை கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களால்தான் ஏற்பட்டதென்றும் திரு. அமிர்தலிங்கம் தமது தீர்ப்பின்போது கூறினார்.

## தலைமைக்காரர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

கிராமத் தலைமைக்காரர்களாகக் கடமையாற்றி பென்ஷன், கஷ்டகூடு முதலிய சலுகைகளைப் பெறாத 4000 பேர்களுக்கு இன்று பதவியிலுள்ள தேசிய அரசாங்கத்திற்கு தங்கள் கோரிக்கைகளை சரியான முறையில் கவனிக்குமாறு ஒரு மகஜர் மூலம் கேட்டுள்ளனர் இதற்கான சங்கம் ஒன்றும் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது

## பருத்தித்துறையில் ஐ. தே. க. கிளை

பருத்தித்துறை, திங்கள்

ஐக்கியதேசியக் கட்சியின் வடமராட்சிக் கிளையின் விசேட பொதுக் கூட்டமொன்று தலைவர் திரு எஸ். சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பல பிரயாணிகள் சங்கம் ஒன்றை உருவாக்குவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டதுடன் பருத்தித்துறையில் ஐ.தே.கட்சி இ.போ.ச. தொழிலாளர் சங்கக் கிளையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## கலைவிழா

குரும்பசிட்டி ஞாயிறு

குரும்பசிட்டி உதயதாரகை சனசமூகநிலையத்தினரின் ஆதரவில் எதிர்வரும் வியாழக்கிழமை வடபகுதி உள்ளூராட்சி ஆணையாளர் திரு என். சி. மாணிக்கவாசகர் தலைமையில் குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச்சங்க திறந்தவெளி அரங்கில் கலைவிழா வொன்று வெகுசிறப்பாக நடைபெறவிருக்கின்றது இக்கலைவிழாவினை பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் ஆரம்பித்துவைப்பார். இலங்கையிலுள்ள போலந்து தூதுவர் திரு ஜோசெவ் சாகிஷ்விச்சும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்வர்

## தீர்மானம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கெல்லியடி சந்தைக்கருகாமையிலுள்ள பொதுக்கிணற்றைச் சிறுபான்மைத் தமிழ்மக்களுடைய பாவனைக்கும் அனுமதிக்க வேண்டுமென்று கெல்லியடி பட்டின சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது, சாதி பேதம் பாராட்டுவது பாவமென்றும் பிறப்பால் சகலரும் ஒருமித்தவர்களேயென்றும் வெகுவிரைவில் சிறுபான்மைத் தமிழர் என்ற பதத்தையே அழித்துவிட வேண்டுமென்றும் கெல்லியடி பட்டின சபைத் தலைவர் திரு வே. க. பொன்னையா அபிப்பிராயம் தெரிவித்தார்,

## விவசாயிகள் கஷ்டம்

வவுனியா, திங்கள்

சென்ற சிலதினங்களாக வவுனியாவில் பெய்துவந்த மழையால் அப்பகுதி விவசாயிகளுக்கு பெரும் நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டுள்ளது. இந்தப்பகுதியில் இந்த மாதத்தில் வெங்காயம் நாட்டுவது வழக்கம். இக்காலத்தில் மழைதொடர்ச்சியாக பெய்வதால் பெருந்தொகையான பணத்தை முதலீடுசெய்து பயிர்செய்த வெங்காயமும் பண்படுத்தப்பட்ட நிலங்களும் பயனற்ற நிலையில் உள்ளன.

வவுனியாப்பகுதி விவசாயிகள் விதைவெங்காயம் எடுப்பதற்கு பெரும் கஷ்டமுற்று யாழ்ப்பாணத்தில் இருந்து உத்தரவு எடுத்து வெங்காயத்தை வவுனியாவுக்கு கொண்டுவந்து பயிர்செய்தும் அவர்கள் எவ்வித பயனுமில்லாமல் நஷ்டமடைந்து கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## உற்சவ விழா

யாழ்ப்பாணம், செவ்.

இயக்கச்சிவிநாயகர்கோயில் வருடாந்த உற்சவவிழா விமரிசையாக நடைபெற்றது. செல்விகள் வி. மகாலட்சுமி, ராஜலட்சுமி சகோதரிகளின் பரதநாட்டிய நடனங்கள் இடம்பெற்றன. சர்க்கஸ்ராணி குமாரி லதாவின் சர்க்கஸ் காட்சிகள், தென்னிந்தியாவைச் சேர்ந்த கே. ஆர். இராமசாமிப்பிள்ளை கோஷ்டியினரின் கரக காவடி ஆட்டங்களாகியனவும் நடைபெற்றன. சுவாமிகள் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் வந்தருளினர்.

## வாழ்க்கை முறையும் உடல் வலிமையும்

பருத்தித்துறை திங்கள்

சுகவாழ்வுக்கான வாய்ப்புகள் கிராமப் புறங்களில் இயற்கையாகவே அமைந்துள்ளன. அவைகளை நாம் நல்லமுறையில் பயன் படுத்தினால் நிரந்தரமாகவே சுகவாழ்வை அனுபவிக்க முடியும், இன்றைய நிலையில் நம்மத்தியில் பலவேறுவகைநோய்கள் எதிர்பாராது நம் மத்தியில் தோன்றுவதற்கு முக்கியகாரணம் நமது பழக்கவழக்கங்களும் உணவுவகைகளும் மேல்நாட்டுமுறையில் பின்னப்பட்டிருப்பதேயாகும், நம் முன்னோர் சுகதேகிகளாகவும், திடகாத்திரமாகவும் இருந்தமைக்கு காரணம் அவர்களது வாழ்க்கை முறையும் உணவின் தரமுமேயாகும்,

இவ்வாறு வடமராட்சி பகுதிச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திரு அ. வே. ஜீவநாயகம் புலோலி கிழக்கு கிராமமுன்னேற்ற, மாதர்முன்னேற்றச் சங்கங்களின் சார்பில் நடாத்தப்பட்ட சுகாதாரக்கல்விக் கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையில் கூறினார்,

யாழ்மாவட்டசுகாதாரத்துறைக் கல்விப் பொறுப்பதிகாரி திரு எஸ். பொன்னம்பலம் அவர்களது தலைமையில் நடைபெற்ற இம் மூன்றுநாள் கருத்தரங்கில் தலைவர் தமது உரையில் தனிப்பட்டோரது நலனும் குடும்பநலத்திட்ட ஆலோசனைகட்கும் காம்செவிசாய்க்கவேண்டியது நமது நாட்டினதும் நம் வாழ்வுக்கும் இன்றியமையாதது என்பதை வற்புறுத்தியதுடன் கிராமமுன்னேற்ற சனசமூக நிலையங்கள்போன்ற நற்பணிகள் புரிவதுடன் சுகாதாரப்பகுதியினர் மேற்கொள்ளும் நோய் தடுப்பு இயக்கங்கள் நாட்டில் பலன் அளிக்கும் வகையில் பிரசாரம் செய்வதுடன் இயலுமான ஒத்துழைப்பையும் நல்க வேண்டியது அவசியம் என்றார்

பெண்களும் ஆண்களுமாக சுமார் 100 பேர்வரை கலந்துகொண்ட இக்கருத்தரங்குகள் சந்தாதோட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது

## இசை ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

அகிலஇலங்கை இசையாசிரியர்சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் அண்மையில் பாரதி வித்தியாசாலைமண்டபத்தில் உபதலைவர் திரு கே. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது அதில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

உத்தியோகமற்றிருக்கும் இசைத்தராதரம்பெற்றவர்களை இசையாசிரியர்கள் இல்லாத கல்லூரிகளில் நியமிக்கும்படி கல்விப்பகுதியைக் கேட்டுக்கொள்ளுதல் வருடாவரும் ஆவணி விடுமுறைக் காலத்தில் இசைவிழா நடத்துவது மாணவர்களுக்குப் பிரத்தியேகமான இசைவகுப்பு நடாத்துவது வருடமொருமுறை இந்தியாவிலிருந்து சங்கீத மேதையை வரவழைத்து இசை ஆசிரியர்களது கலை மேலும் வளர்ச்சியடையச்செய்வது

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் வ. இராசையா தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள்: போஷகர்- வ. தம்பையா, தலைவர்- வே. கதிராமு, உப தலைவர்- வ. இராசையா, செயலாளர்- தி. சின்னையா உப செயலாளர்- வ. முருகேசு, பொருளாதர்- வே. அ. பாலசிங்கம், நிர்வாக உறுப்பினராக கா. யோகராசா, பொ. நவநீதபாலன், க. பொன்ராஜா, கு. சிவபாக்கியம், ஆ. சற்குணம்,

விளையாட்டுக் குழுவினர் ராஜா, ர. சுந்தரலிங்கம், சிங்கராஜா, கா. யோகநாதன், க. பொன்ராஜா, க. நாகதேவன்.

## கூட்டுறவு வைத்தியசாலை கட்டடவேலைகள்

பருத்தித்துறை திங்கள்

வடமராட்சி கூட்டுறவுவைத்தியசாலைக்கென தெரிவுசெய்யப்பட்ட வல்லையிலுள்ள காணியில் மேற்படி வைத்தியசாலைக்கான கட்டடத்திற்கான அத்திவாரக்கல்நாட்டும் விழா மே மாதம் 6ம் திகதியன்று நடைபெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

கூட்டுறவு உதவி ஆணையாளர்திரு எம். மதிபாலசிங்கம் அடிக்கல் நாட்டுவார் எனவும் ஆரம்பவேலையாக ஒருவார்டும் பிரசவவிடுதியுமே கட்டப்படவிருப்பதாக கூறப்படுகிறது,

## 'மனிதப் பிரச்னையாக நோக்க வேண்டும்'

பம்பலப்பிட்டி, திங்கள்

இலங்கை-இந்திய ஒப்பந்தம் எவ்வாறு நடைமுறைக்கு கொண்டுவரப்படவிருக்கின்றதென்பதில்தான் அதன்வெற்றி தங்கியிருக்கின்றது. இந்தப் பிரச்னை மனிதப் பிரச்னை என்ற ரீதியிலேயே ஆராயப்பட வேண்டும். அத்துடன் இங்கிருந்து செல்லும் இந்தியர்களுக்கு இந்தியாவில் புனரமைப்பு திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று தோட்டத்துரைமார்சங்கத் தலைவர் திரு டபிள்யூ கே சபில்டலரோன் சங்கத்தின் 111-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்,

மேலும் தொடர்ந்து அவர் கூறியதாவது- இந்திய இலங்கை ஒப்பந்தம்பற்றி பாதிக்கப்பட்ட சங்கங்களுடன் கலந்தாலோசித்து சுமுகமான பிரச்னை தீர்க்கப்படுவதுடன் நாட்டின் பொருளாதாரப் பெருக்கத்திற்கும் நல்ல சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும், மேலும் பொருள் நெருக்கத்தை ஊக்குவிப்பதற்கும் திடமான விலை நிதானங்களை உண்டாக்குவதற்கும் நாம் பாடுபட வேண்டும்.

## சந்திரனை படம் பிடிக்கும் ராடர்

வாஷிங்டன், ஏப்ரல் 26

சந்திரனில் தெரியும் அரைப் பகுதியையும் படம்பிடிக்க அமெரிக்கவிஞ்ஞானிகள் முதல் முறையாக "ராடர்" கருவியைப் பாவித்துள்ளனர். பூமியில் வைக்கப்பட்டுள்ள இந்த மிகப்பெரிய "ராடர்" சந்திரனில் உள்ள மலைகள், மடுக்கள், எரிமலைகள் ஆகியவற்றை படம் பிடித்துள்ளன. இந்தச் சோதனையை கோர்னல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பௌதிகவியல் பட்டதாரி மாணவர் ஒருவர் செய்தார்.

## குறைந்த விலையில் ரேடியோ

பம்பலப்பிட்டி, திங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தினரால் இறக்குமதி செய்யப்பட்ட ரேடியோக்களும், கைக்கடிகாரங்களும் ஏற்கனவே குறிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க குறைந்த விலையில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களினால் விற்பனை செய்யப்படும் எனத் தெரியவருகிறது. பர்ட்டரி உதவியினால் இயங்கும் வானொலிப் பெட்டிகளையும் விற்பனைசெய்வதற்காக கூ. மொ. வி. அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

வவுனியா, திங்கள்

உடுவில் கிறிஸ்தவ கல்லூரி சாரணர் கோஷ்டியினர் வவுனியா மகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருக்கின்றனர்.

## யங்லயன்ஸின் சாதனை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் பொலிஸ் கேம்பிரிச் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே வைத்தீஸ்வரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யங்லயன்ஸ் இனிங்ஸாலும் 85 ரன்களாலும் வெற்றி பெற்றது.

பொலிஸ் கேம்பிரிச் முதல் இன்னிங்ஸில் 68 ரன்களை எடுத்தது. ராசிக் 38 ரன்களை எடுத்தார். இரண்டாவது இனிங்ஸில் 43 ரன்களை எடுத்தது. இரு ஆட்டங்களிலும் அன்ரனி, ஜெயராஜா, தேவராசா முறையே 9, 4, 8 விக்கெட்டுகளை வீழ்த்தினர். யங்லயன்ஸ் முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 191 ரன்களை எடுத்தது. இம்மானுவேல், ஜெயராஜா, பத்மநாதன், செல்லச்சாமி, குணநாயகம் முறையே 45, 27, 24, 21, 20 ரன்களை எடுத்தனர்.

யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், பண்டியத்தாழ்வு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் யங்லயன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யங்லயன்ஸ் இன்னிங்ஸாலும் 169 ரன்களாலும் வெற்றி பெற்றது. சென். அன்ரனிஸ் இரு இனிங்ஸிலும் முறையே 11, 21 ரன்களை எடுத்தது. அன்ரனி, இம்மானுவேல் இரு ஆட்டங்களிலும் முறையே 11, 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். யங்லயன்ஸ் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 201 ரன்களை எடுத்து மென்பந்துப் போட்டியில் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளனர். அன்ரனி, செல்லச்சாமி குமாரசாமி, வின்சன், டேவிற் (கப்டன்) முறையே 56, 87, 28, 27, 31 ரன்களை எடுத்தனர்.

## குண்டுக்கு குழந்தைகள் பலி

கொழும்பு, திங்கள்

பலப்பிட்டியாவில் நேற்றிரவு ஒரு வீட்டில் குண்டு வீசப்பட்டதால் இருகுழந்தைகள் மரணமானார்கள். மற்றொரு குழந்தையும், பெண்ணும் காயமடைந்தார்கள் சம்பவம் நிகழ்ந்த பொழுது. பிள்ளைகளின் தகப்பனார் வீட்டில் இருக்கவில்லை.

## வாலிப முன்னணி நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ வாலிப முன்னணியின் அச்சுவேலி கிராமசபை கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் அச்சுவேலியில் நடைபெற்றது, கூட்டத்தில் பிரதம பேச்சாளராக அ. இ. த. கா. செயலாளர் திரு. தா. குணரத்தினம் கலந்துகொண்டார்.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் தா. குணரத்தினம், தலைவர் கா. சிவசேகரம், உபதலைவர்கள் செ. குணபாலசிங்கம், இ. வரதராசா, கா சண்முகராசா, காரியதரிசி கா. குணரத்தினம், உதவிக் காரியதரிசி சி சற்குணலிங்கம் இணைத்தனாதிகாரிகள் கா செல்வநாயகம், சி. செல்வராசா.

## வருடாந்தக் கொண்டாட்டம்

பருத்தித்துறை, திங்கள்

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போ மே மாதம் இரண்டாம் திகதி வருடாந்தக் கொண்டாட்டத்தைக்கொண்டாடவிருக்கிறது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி ..-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org